பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 17 | சனிக்கிழமை | 01.08.2020 | கதிர் 136

## தேர்தல் சட்டத்தை மீறிய ஏழு வேட்பாளர்கள் கைது

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 7 வேட்பாளர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தல்

2

# 5ஆம் திகதி மஹிந்தவின் முகத்தில் ஓங்கி அறைந்த செய்தி வரவேண்டும்



## ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்று சேர்ந்து அணி திரளுமாறு சுமந்திரன் அறைகூவல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 01

எங்களைப் பற்றி நாங்கள் தீர்மானிப்போம், எங்கள் தலைவிதியை நாங்கள் நிர்ணயிப்போம், நீங்கள் அதைச் செய்யவேண்டிய தேவை கிடையாது என்பதே எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாங்கள் கொடுக்கின்ற செய்தியாக இருக்கவேண்டும். முகத்தில் அறைந்தால் போல் நீங்கள் தேர்தலிலே வாக்களிக்க வேண்டும். இன்றைய தேவை அதுதான். அது பலமான அடியாகவும் இருக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.


2












## 5ஆம் திகதி மஹிந்தவின் முகத்தில் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தலில் நாம் ஒரு குரலாக ஒலிக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஒரே குரலாக ஒலிக்கவேண்டும் என்று நாம் கேட்கின்றோம். அது பலமான குரலாக இருக்கவேண்டும் என்றும் நாம் விரும்புகின்றோம். அப்படியான தேவை இன்று அத்தியாவசியமானதாக இருக்கின்றது.

கடந்த சில நாள்களாகத் தென்னிலங்கையிலிருந்து வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது, அவற்றிலே குறிப்பாக காபந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஏதோ அவர்கள் கொடுப்பவற்றை நாங்கள் வாங்கித் தின்பவர்கள் போல் பேசிக் கொண்டிருக்கின்றார்.

நாங்கள் எமது தேர்தல் அறிக்கையை வெளியிட்ட நாளிலிருந்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள எமது அரசியல் நிலைப்பாட்டைப் பார்த்து, அதெல்லாம் தர முடியாது, சமஷ்டி என்றால் நாம் விட்டுக்கொடுக்கவே மாட்டோம், அரசியல் தீர்வு என்ற ஒன்றும் இல்லை, நாம் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியைக் கொடுப்போம் என்று ஏதோ தாங்கள்தான் எங்களுக்கானதைத் தீர்மானிக்கின்றார்கள் என்ற விதத்தில் மஹிந்தவும் அவரின் சகாக்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தத் தேர்தலிலே நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கின்ற செய்தி மிகவும் பலமானதாக இருக்கவேண்டும். எங்களைப் பற்றி நாங்கள் தீர்மானிப்போம், எங்கள் தலைவிதியை நாங்கள் நிர்ணயிப்போம், நீங்கள் அதைச் செய்ய வேண்டிய தேவை கிடையாது என்று எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாங்கள் கொடுக்கின்ற செய்தியாக இருக்கவேண்டும். முகத்தில் அடித்தால்போல் நீங்கள் தேர்தலிலே வாக்களிக்க வேண்டும். இன்றைய தேவை அதுதான். அது பலமான அடியாகவும் இருக்கவேண்டும்.

ஒட்டுமொத்தமாக - தமிழ் இனம் ஒன்றாக - வடக்கிலும் கிழக்கிலும் 5 தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குகின்ற அந்த வாக்குகளில்தான் அந்தச் செய்தியை அழுத்தமாக - இறுக்கமாக முகத்தில் அடித்தால்போல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாம் சொல்ல முடியும்.

இந்தக் கடமையை எங்களுக்காகச் செய்யவேண்டும். எங்களுடைய தன்மானத்துக்காகச் செய்யவேண்டும். எங்களுடைய பிறப்புரிமையை நிலைநாட்டுவதற்காகச் செய்யவேண்டும். இன்று அதைச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதைவிட வேறு வழி கிடையாது. வேறு எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் உறுப்பினர்களை நாடாளுமன்றுக்கு அனுப்புகின்ற திராணி கிடையாது.

மாற்று அணி என வந்துள்ளவர்களை நீங்கள் திருப்பிப் பார்க்கவே கூடாது. அவர்கள் எல்லாம், ஆசன ஆசைக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிப்போனவர்கள். அத்தோடு இன்னுமோர் அணியிருக்கின்றது. இளைஞர்களுக்கு அரச வேலைபெற்றுத் தருவதாக விண்ணப்பப் படிவம் வாங்கியிருக்கின்றார்கள். அதற்கு நீங்கள் விலை போய்விடக் கூடாது.

இந்தத் தேர்தலிலே அங்கஜன் இராமநாதன் நாடாளுமன்றத்துக்குப் போகக் கூடாது. அப்படிப் போவதாக இருந்தால், வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்ச்சியாக ஒரு கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கும் - என்றார்.

# நாளை நள்ளிரவுடன் பிரசாரம் முடிவு

தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

நாளை இரவு 10.00 மணியின் பின்னர் பிரசாரத்திற்கான பொறிமுறைகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அமைதி காலம் ஆரம்பமாகிறது. எனவே அமைதி காலத்தில் சட்டத்திற்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் பிரசார கூட்டங்களை நடத்துதல், கிராமங்களிலும் வீடுகளிலும் கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் சென்று வாக்குகளை கேட்டல், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகங்களில் பிரசார பலகைகளை காட்சிப்படுத்தியிருத்தல் மற்றும் சுவரொட்டிகளையும் அறிவித்தல்களையும் பதாதைகளையும் காட்சிப்படுத்தல் என்பவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவின் பின்னர் ஆரம்பமாகும் அமைதி காலப்பகுதியினுள் அனைத்து அரசியல் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் இவற்றை தவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# செல்லச்சாமி காலமானார்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச்செயலாளரும் அமைச்சருமான எஸ். செல்லச்சாமி தனது 95 ஆவது வயதில் இன்று காலமானார்.

சுகவீனமடைந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக கொழும்பிலுள்ள வீட்டிலேயே சிகிச்சைபெற்று வந்த அவர் இன்று நண்பகல் காலமானார் என உறவினர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக விளங்கிய செல்லசாமி, இ.தொ.காவின் நீண்டகாலம் பொதுச் செயலாளர் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1965 ஆம் ஆண்டிலேயே எஸ். செல்லச்சாமி பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். 1992 வரை அவர் அப்பதவியில் நீடித்தார். 27 ஆண்டுகளாக அப்பதவியில் நீடித்தவர் என்ற பெருமையும் சாரும். இ.தொ.காவின் அரசியல் செயற்பாட்டை தலைநகரிலும் கோலோச்ச வைத்தவர் அவர்.

## தேர்தல் சட்டத்தை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய, பொலிஸார் 10 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வீட்டைச் சுடுகிறது ஒட்டப்பம்

பட்டினத்தார் கதையில் வரும் ஒரு பழமொழி 'தன்வினை தன்னைச் சுடும்; ஒட்டப்பம் வீட்டைச் சுடும்' என்பது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு இந்தப் பழமொழியின் அர்த்தம் மிகத் தெளிவாக இப்போது புரியத் தொடங்கியிருக்கும்.

'இந்த மண்ணுக்குரியவர்களை மதியுங்கள், இந்த மண்ணோடு நின்றவர்களை அங்கீகரியுங்கள், இந்த மண்ணுக்காய்ப் போராடியவர்களுக்கு இடமளியுங்கள்!' என்றெல்லாம் கெஞ்சிய சமயங்களில், அவற்றை மிஞ்சி நின்று, மிதப்போடு செயலாற்றியவர் சம்பந்தன். அந்தத் திமிர்ப்போக்கின் விளைவை அவர் இப்போதாவது – இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்திலாவது – பட்டறியக் கிடைத்திருப்பது சத்தியத்தின் – தர்மத்தின் – பெருமைதான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சரிவோடு மகத்தான பதவியும், தலைமையும், பொறுப்பும் அரசியலில் மிக்க அனுபவஸ்தரான சம்பந்தனைத் தேடி வந்தன. அதைப் போட்டுடைத்தமைதான் அவர் சரித்திரமாகியிருக்கின்றது.

அரசியல் தீர்க்க தரிசனமற்ற தமது செயற்போக்கினாலும், அரசியல் திமிர்த்தனச் செயற்பாட்டினாலும், தனக்குக் கிடைத்த இனத் தலைமை என்ற உயர்ஸ்தானத்தை மண்ணாக்கி விட்டு, இனத்தையும் கொண்டு வந்து நடுவீதியில் நிறுத்தியிருக்கின்றார் அவர் என்றே கூற வேண்டும்.

2010 பொதுத் தேர்தலிலும் சரி, 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலும் சரி, 2015 பொதுத் தேர்தலிலும் சரி, யுத்த காலத்திலும் பின்னரும் மண்ணோடும், மக்களோடும் நின்றவர்கள் சம்பந்தனின் கண்களில் படவேயில்லை.

தனக்கு விரும்பியவர்களை எல்லாம் 'இறக்குமதி' செய்து இந்த மண்ணின் மைந்தர்களைப் புறக்கணித்தார். தூக்கி எறிந்தார்.

கடந்த பொதுத் தேர்தல் சமயம், யாழ்ப்பாணத்துக்கு வந்து மாவை சேனாதிராஜாவிடம் ஆசனம் கேட்டவர்தான் இன்று சம்பந்தனுக்கு திருகோணமலையில் துணிச்சலுடன் முகம் கொடுத்திருக்கின்றார்.

முன்னாள் போராளிகளுக்கும், இந்த மண்ணோடு நின்றவர்களுக்கும் இடம் கொடுங்கள் என்ற நியாயமான கோரிக்கையைத் தூக்கிக் கடாசி விட்டு, யுத்த காலத்தில் இந்த மண்ணோடும் மக்களோடும் நிற்காத ஒருவரைக் கூட்டி வந்து பெரும் அரசியல் தீங்கிழைத்தார் சம்பந்தன்.

அப்படி நிறுத்தப்பட்டவரே இன்று முன்னாள் போராளியை முன் நிறுத்தி, அந்தப் போராளிக்கு இடமளித்து நீங்கள் ஒதுக்குங்கள் என்று சம்பந்தனைப் பார்த்து ஏளனம் செய்யும் நிலைமை.

முப்பது, நாற்பது வருடங்களாகத் திருகோணமலை, சிங் களத்தால் சூறையாடப்பட, ஏதும் செய்யாமல் பார்த்திருந்த குற்றவாளி என்ற இழிசொல்லுக்கு இப்போது ஆளாகியிருக்கின்றார் சம்பந்தன்.

உங்கள் இடத்துக்கு ஒரு 'பயர் பிராண்ட்' இளம் அரசியல்வாதியை திருகோணமலையில் உருவாக்குங்கள் என்றால், நீங்களோ போய் துரைரட்ணசிங்கம், குகதாசன் என்று உங்களுக்குக் கோவை தூக்கும் உதவியாளர்களைக் கொண்டு வருகின்றீர்கள் என்று சம்பந்தனைப் பார்த்து குறை சொல்லும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கின்றது.

அகமத்தாக சம்பந்தனின் தெரிவில் சுமந்திரனின் தேர்வு சரியாகியிருக்கலாம். மற்றெல்லாத் தெரிவும் ஏமாற்றமே.

இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒரு தடவை நாம் சுட்டிக் காட்டியபடி சம்பந்தனின் சகாப்தம் என்பது ஏமாற்றங்களும், ஏமாற்றுதல்களும் நிறைந்ததாகவே அமையப் போகின்றது.

இந்தத் தேர்தலில் திருகோணமலையில் சம்பந்தன் வெல்லலாம். வெல்வார். எம்.பியாகத் தேர்வார். அதுவல்ல விடயம்.

திருகோணமலையில் தனது தெரிவையும், தேசிய மட்டத்தில் தமது தலைமையையும் இருக்கும் காலம் வரைத் தக்க வைத்தமை தவிர, அவர் சாதித்தது வேறு ஒன்றுமில்லை என்பதாகத்தான் அவரது சரித்திரம் நம்மைக் கடந்து போகும்.

திருகோணமலையிலும், தேசிய மட்டத்திலும் மக்களையும், மண்ணையும் காப்பாற்றி வழி நடத்தக் கூடிய உண்மையான தலைவர்களை உருவாக்காமல் அவர் இந்த அரசியல் களத்திலிருந்து நீங்குவராயின் இந்த மக்களை நடுத் தெருவில் விட்ட சுயநல அரசியல்வாதி என்ற அவப்பெயர் சரித்திரத்தில் நிலைப்பதினின்றும் அவர் தப்பவே முடியாது என்பதுதான் நிஜம்.

# ஈ.பி.டி.பி தான் மாற்று அணி அடித்துக் கூறுகிறார் டக்ளஸ்

## ஏனைய அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாம்





வவுனியா,ஓக.01

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் மாற்று அணி ஈழ மக்கள் ஜனநாயக கட்சியாகவே இருக்கும் என செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரும் நோக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இன்றையதினம் வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வன்னிவிளான் குளத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது கட்சியானது வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட 7 மாவட்டங்களில் இம்முறை போட்டியிடுகின்றது. மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரண்டு வரும் நிலையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன்.

மக்கள் கோரியதன் அடிப்படையில் இம்முறை வீணைச் சின்னத்தில் எமது கட்சி களமிறங்கிய நிலையில் மக்கள் தமது வாக்குப் பலத்தினால் எமது கட்சியை பேரம் பேசும் சக்தியாக மாறுவதற்கு சிறந்த அடித்தளத்தை வழங்க வேண்டும்.

தன்னையும் காத்து தன்னை நம்பியுள்ள மக்களையும் பாதுகாப்பதே சிறந்த தலைமைத்துவத்தின் வெளிப்பாடாகும். அவ்வாறில்லாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களை தமது நலனுக்காக பயன்படுத்திவிட்டு மக்களை ஏமாற்றும் தலைமைத்துவத்தை இதுவரை நாம் மே ற்கொள்ளவில்லை.

சந்திரிக்கா அரசாங்கத்தில் வலி வடக்கை சுவீகரிக்க முற்பட்டபோது 9 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைவசம் வைத்திருந்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்போம் எனக்கூறி வலிவடக்கு சுவீகரிப்பை தடுத்தது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்த போது தமிழ் மக்களின் அழிவைக்கூட இவர்களால் காப்பாற்ற முடியவில்லை. நாடாளுமன்ற பிரதிநித்துவத்தை தமது சொந்த அரசியல் நலனுக்காக பயன்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதனை மக்கள் தற்போது உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் செல்லும் இடமெல்லாம் மக்கள் பல ஏமாற்றத்துடன் தமது குறைகளை யாரிடம் சொல்வது என்று அறியாது பரிதவித்த நிலைகளைக் கண்ணாலே கண்டு வருகிறோம். அண்மையில் யாழ் வர்த்தக சமூகத்தை சந்தித்த போது தங்கள் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவை எடுக்கக்கூடிய அரசியல் தலைமை தோழர் டக்ளஸ் தேவானந்தாவிடமே காணப்படுவதாகத் தெரிவித்தனர்

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் எம்மோடு அணி திரள்வதை தடுக்க முடியாத ஊடகங்களும் ஒரு சில அரசியல்வாதிகளும் எமது கட்சி மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்

எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பொன்னையன் என்பவரை ஒரு பத்திரிகையின் முதலாளி பணத்தை கொடுத்து எமது கட்சி மீது அவதூறுகளை அள்ளி வீசி வருகிறார்

பொன்னையனுக்கு தெரியும் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி மீது எவ்வளவுதான் குற்றச்சாட்டுகளை அடுக்கினாலும் டக்ளஸ் தேவானந்தா அதனை பொருட்படுத்தமாட்டார் என்பது அறிந்ததால் அவர் இவ்வளவு துணிவாக பேசி வருகிறார்.

இதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளரான திருமதி விஜயகலா மகேஸ்வரன் கடந்த காலத்தில் என்மீது சேறு பூசுவதற்காக பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தி வந்தார்.

இவ்வாரம் நெடுந்தீவு பிரதேசத்தில் அவர் அன்று தெரிவித்த கிணற்றினுள் ஆயுதங்கள், மனித எச்சங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்த நிலையில் பொலிஸார் நீதிமன்ற உதவியுடன் அதனை அகழ்வாராய்ச்சி செய்தனர். இறுதியில் எந்தவிதமான தடயங்களும் மீட்கப்படவில்லை. ஆகவே எம் மீது எவ்வளவுதான் பழிகளை போட்டாலும் காலம் எமது நியாயத்தையே பறைசாற்றி நிற்கிறது.

எனினும் ஊடகவியலாளர்கள் இவ்வாறு அவதூறுகளை சுமத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுவருகின்றதன் அடிப்படையில் குறித்த அவதூறு தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். – எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்கள் தமது எதிர்கால பயணத்தினை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு மாற்றத்திற்கான ஓர் அணியாக எம்முடன் சேர்ந்து பயணிப்பதற்கு இம்முறை தயாராக இருக்கிறார்கள் என்றும் மேலும் தெரிவித்தார்.

# 140,000 டொலர் உட்பட பல கோடி ரூபா பணத்துடன் ஒருவர் வசமாக சிக்கினார்

தெமட்டகொடை பிரதேசத்தில் பல இலட்சம் டொலர்கள் உள்ளிட்ட பல கோடி ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளன.

தெமட்டகொடை பிரதேசத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் அமெரிக்க டொலர் நோட்டுகள், 3 கோடி 13 இலட்சம் இலங்கை ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் 4 கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றிரவு 9.10 மணியளவில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு வடக்கு பிரிவு வீதித் தடை பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, தெமட்டகொடை பிரதேசத்திலுள்ள வீடொன்று சோதனையிடப்பட்டது. இதன்போது குறித்த பணம் மற்றும் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் கொழும்புத் துறைமுகப் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமிர்திலும் சிறந்தது தாய்ப்பால்



ஆண்டுதோறும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஒருவார காலம் உலக தாய்ப்பால் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. தாய்ப்பால் என்பது கலப்படமற்ற இயற்கைஉணவு. குழந்தைக்குத்தேவையான அனைத்துச் சத்துக்களும் தாய்ப்பாலில் உள்ளது. ஒவ்வொரு குழந்தைகளின் வாழ்வின் அடித்தளமாக கருதப்படுகிறது. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் உலகம் முழுவதும் ஐக்கிய நாடு குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பு இந்த தினத்தை அறிமுகப்படுத்தியது. 170 நாடுகளில் 1991 முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது. தாய்ப்பாலைத் தவிர வேற எந்த செயற்கை உணவுகள் கொடுப்பது குழந்தையின் உடலுக்கு தீங்கினையே விளைவிக்கும். தாய்ப்பாலின் மகத்துவத்தை உணர்த்துவது, குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதை வலியுறுத்தல், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் ஆகிய நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டு இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தாய்ப்பாலில் குழந்தைக்கு வேண்டிய அனைத்து சத்துப் பொருள்களும் சரியான விகிதத்தில் உள்ளன. மூளை வளர்ச்சி சரியாக அமைய மிகத் தேவையான புரதங்கள், அத்தியாவசிய கொழுப்புச் சத்துக்கள் தாய்ப்பாலில் மட்டுமே உள்ளன. தாய்ப்பால் இயற்கையிலேயே சரியான சீதோஷ்ண நிலையில் உடனுக்குடன் புதிதாகக் கிடைக்கும் உணவு. உற்பத்தி செய்யப்படாத உணவுப் பொருள் என்பதால் எவ்வித மாசிற்கும் இடமில்லை. மாறாக கிருமிகளைக் கொல்லும் பொருள்களைத் தன்னகத்தே உடையது. தாய்ப்பாலை தவிர வேறு எந்த செயற்கை உணவுகள் கொடுப்பதும் தவறாகும். ஒரு தாய் குழந்தையை பிரசவித்தவுடன் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். மேலும் அறுவை சிகிச்சை மூலம் பிறக்கும் குழந்தையாக இருந்தால் குழந்தை பிறந்து 2 மணி நேரத்தில் தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின்



மரணத்தைக் குறைக்க உலக நாடுகள் முனைந்து செயல்படுகின்றன. குழந்தை பிறந்த முதல் 2 ஆண்டுகள் உடல், மன, மூளை வளர்ச்சி அதிவேகமாக இருக்கும். இப்பருவத்தில் குழந்தையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஏதேனும் தடை ஏற்பட்டால் வாழ்நாள் முழுதும் சீராக்க முடியாத பாதிப்பை ஏற்படுத்தும். வளர்ச்சிக்கு உறுதுணையாக தாய்ப்பால் அளிப்பது தாய்மார்களின் கடமை. குறைந்தது 6 மாதங்களுக்காவது தாய் பாலூட்ட வேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். தாய் தன் மார்போடணைத்துப் பாலூட்டுகையில் தொப்புள் கொடிக்குப் பிறகு மறுபடி ஒரு பிணைப்பு உடல் ரீதியாக ஏற்படுகிறது. தாய்ப்பால் கொடுப்பது காலம் காலமாகப் பெண்கள் இயற்கையாகவே செய்து வந்த பணி. ஆனால் தற்காலத்தில் தாய்ப்பால் கொடுப்பது பெருமளவில் குறைந்து வருகிறது. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் தாய்ப்பால் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

**உலக தாய்ப்பால் வாரம் இது.**

தாய்ப்பால் கொடுக்கும் போது தாய் மிக முக்கியமாக சில விடயங்களினைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும்போது அவர்களுடைய மன நிலை அமைதியாகவும் சந்தோசமாகவும் இருக்க வேண்டும். குழந்தையை மார்போடு அனைத்து கொடுக்கப்படும் தாய்ப்பால் மூலம் குழந்தைக்கு வளர்ச்சியும், நோய் எதிர்ப்பு சக்தியும் பெருகுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். மாறாக மன அமைதி இல்லாமல் வெறுப்புடன் தாய் குழந்தைக்கு பாலூட்டும்போது தாய்ப்பாலின் அளவு குறைந்து குழந்தையை மன ரீதியாக பாதிக்கின்றது. பாலூட்டும் சமயத்தில் பெண்கள் தேவையற்ற மாத்திரைகள் உட்கொள்வது தவறு, இது குழந்தைகளைப் பாதிக்கும். தாய்ப்பால் கொடுத்த பிறகு குழந்தையின் பின்புறத்தை மெதுவாக தடவிகொடுப்பது நல்லது. இந்த செயல் குழந்தைக்கு வாந்தி ஏற்படுவதை தவிர்க்கும். இரவு நேரங்களிலும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது மிகவும் முக்கியமாகும். வேலைக்குச் செல்லும் பெரும்பாலான தாய்மார்கள் குழந்தைக்கு பசும் பால் மற்றும் பெட்டிப்பாலையே புட்டியில் நிரப்பி குழந்தைகளுக்கு கொடுக்கின்றனர். இது மிகவும் தவறான செயலாகும். மாறாக தாய்ப்பாலை புட்டியில் நிரப்பி குழந்தைகளுக்கு கொடுக்கலாம். நன்றாக கழுவிய சுத்தமான பாத்திரத்தில் நிரப்பி வைக்கப்படும் தாய்ப்பாலானது ஒரு அறையில் சாதாரண வெப்பநிலையில் 6 முதல் 8 மணிநேரமும், அந்த பாலை குளிர்சாதன பெட்டியில் வைக்கும்போது 18 முதல் 24 மணிநேரம் வரையும் கெடாமல் பாதுகாத்துக் கொடுக்கலாம்.

தாய்ப்பால் கொடுப்பதால் தாய்க்கு ஏற்படும் சாதகங்களை அனைவரும் அறிந்து கொள்வது அவசியம். தாய்ப்பால் கொடுப்பதால் அழகு கெட்டு விடும் என்ற தவறான எண்ணம் கொண்டிருக்கின்றனர். பாசத்தோடு தாய்ப்பால் கொடுக்காது கடமைக்குச் செய்பவர்கள் உள்ளனர். பிறர் சொல் கேட்டு தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்துகின்றனர். தாய்ப்பால் கொடுக்காமல் நிறுத்துவது தாய்க்கு பாதகத்தையே ஏற்படுத்தும். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்மார்களுக்கு 500க்கும் அதிக கலோரி குறைந்து கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட உடல் எடை குறைய இது முக்கிய பங்கு வகிக்கும். கூடுதல் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு சர்க்கரை நோய், இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதை தடுக்கலாம். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்மார்களுக்கு கொடிய நோயான புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதை தவிர்க்கலாம். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்மார்களின் உடலில் ஒக்சிற்றோசின் என்ற சுரப்பி கூடுதலாக சுரக்கிறது. இதன் மூலம் கர்ப்பப்பை சுருங்கி தாய்மார்களுக்கு அடுத்த பிரசவத்திற்கு தங்களை தயார் செய்ய உதவுகிறது. குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ, பாலூட்டும் செயலானது, தாய்க்கும் முக்கியமானது. தாய்ப்பால் ஊட்டாத பெண்களுக்கு மார்பு மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது என்பதை தாய்மார்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைக்கு பல சாதகங்கள் கிடைக்கின்றது. தாய்ப்பாலில் தேவையான தண்ணீர், சத்து, வைட்டமின்கள் ஆகியன இருப்பதால் குழந்தைகளுக்கு வயிறு உபாதை தவிர்க்கப்படுகிறது. எந்தக் குழந்தை அப்படி வளர்கிறதோ, அந்தக் குழந்தை காது சம்பந்தப்பட்ட நோய்க்கிருமிகளில் இருந்தும், வயிற்றுப் போக்கிலிருந்தும், மூச்சுக் குழாய் சம்பந்தமான நோய்களிலிருந்தும் காப்பாற்றப்படுகிறது. நெடுங்காலப் பயன்கள் என்னவென்றால் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் ஆஸ்துமா, அலர்ஜி, குழந்தையிலேயே எடை பருமன், குழந்தைப் பருவப் புற்றுநோய் இவற்றின் அபாயத்திலிருந்து ஓரளவு தவிர்க்கப்படுகின்றனர். 4 மாதத்திற்குத் தாய்ப்பால் அருந்தும் குழந்தை, குழந்தைப் பருவ நீரிழிவு வியாதியிலிருந்து காப்பாற்றப்படுகிறது. குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள் பின்னால் இரத்த அழுத்த நோயிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றன. தாயின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிடோசின் என்கின்ற ஹார்மோன் பாசத்தையும் பந்தத்தையும் வளர்க்கிறது. இத்தனை பலன்கள் இருக்கும் தாய்ப்பாலை கொடுப்பது அவசியம். குழந்தைக்கு தாய்ப்பால் மூலம் குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையான கொழுப்பு, சக்கரை நீர், புரோட்டீன், மினரல் போன்றவை சரியான அளவில் கிடைக்கிறது. தாய்ப்பால் குடிப்பதன் மூலம் தாய்ப்பாலில் உள்ள கொழுப்பு அமிலங்கள் மற்றும் சில பொருள்களின் அற்புதக் கலவை குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது.

எனவே இன்றைய நவீன உலகத்தில் குழந்தை பெற்றுக்கொள்வதென்பது பல்வேறு காரணிகளையும் சிந்தித்துத் தீர்மானிப்பதாக இருக்கிறது. அதில்

> தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்மார்களுக்கு 500க்கும் அதிக கலோரி குறைந்து கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட உடல் எடை குறைய இது முக்கிய பங்கு வகிக்கும். கூடுதல் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு சர்க்கரை நோய், இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதை தடுக்கலாம். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்மார்களுக்கு கொடிய நோயான புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதை தவிர்க்கலாம்.

குழந்தைப் பராமரிப்பும் ஒன்று. பாலூட்டுவதை கணவன், குடும்பத்தினர் மற்றும் சமுதாயம் ஊக்குவிக்க வேண்டும். தாய்ப்பால் சுரப்பதற்கான உணவுகளை குழந்தை பிறந்த பின்னர் தாய்க்கு கொடுக்க வேண்டும். மேல்நாடுகளில் தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிப்பது போல் நம் நாட்டிலும் திட்டங்களை முன்னெடுத்தல் அவசியம். மேல்நாட்டில் தாய்ப்பால் வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்த தானத்தைப் போல தாய்ப்பால் தானமும் உயிர் காக்கும் செயலாகக் கருதப்படுகிறது. சேமிக்கப்பட்ட தாய்ப்பால் அநாதைக் குழந்தைகளுக்கும், எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது. பிறந்த குழந்தைகளுக்கு செயற்கை உணவுகளை தவிர்த்து தாய்ப்பால் கொடுக்க வேண்டும். தாய்ப்பாலின் மூலம் தாய்க்கும், குழந்தைக்கும் ஏற்படும் நன்மைகள் குறித்து அரசு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கையினை முன்னெடுக்கலாம். இதுவே இன்றைய நாளின் முக்கிய அம்சம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**
சமூகவியல் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# சம்பந்தன் திருமலையை நேசிப்பவராக இருந்தால்

# போட்டியிலிருந்து ஒதுங்கி ஶ்ரீபனுக்கு வழிவிடட்டும்

## விக்னேஸ்வரன் பகிரங்க வேண்டுகோள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திருகோணமலையை நேசிப்பவராக இருந்து அதனை பாதுகாக்க விரும்பினால் தேர்தல் போட்டியில் இருந்து ஒதுங்கித் துடிப்பும், ஆற்றலும், அறிவும் கொண்ட தனது தம்பி ஶ்ரீபனுக்கு வழிவிட வேண்டும்என்றுதமிழ்மக்கள்தேசியகூட்டணியின் தலைவரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“ஶ்ரீபன் ஒரு வீரத் தமிழன். தன்மானத் தமிழன். ஆகையினால், ஶ்ரீபனுக்கு நீங்கள் விட்டுக்கொடுப்பதன் மூலம் நீங்கள் தோற்க மாட்டீர்கள். மாறாக நீங்கள் வெல்வீர்கள். திருகோணமலை மக்கள் வெல்வார்கள். ஆகவே, நீங்கள் அவ்வாறு செய்தால், வரலாறு உங்களை புகழும். திருகோணமலை மக்கள் உங்களை போற்றுவார்கள். திருக்கோணேஸ்வர பெருமான் உங்களை ஆசீர்வதிப்பார்.” என்று நீதியரசர் இன்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எனது அன்புக்குரிய திருகோணமலை மக்களே,

கடந்த இரண்டு வாரங்களில் இரண்டு முறை திருகோணமலைக்கு வந்து உங்களை சந்தித்திருந்தேன். கடந்த 29 ஆம் திகதியும் அங்கு வந்து உங்களை சந்திப்பதாகத்தான் இருந்தது. ஆனால், தவிர்க்கமுடியாத காரணங்களினால் என்னால் அங்கு வரமுடியவில்லை. அதனால், இந்த அறிக்கை மூலம் உங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நடைபெறும் இந்த தேர்தல் கிழக்கு மாகாண மக்களை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. இந்த தேர்தலை நீங்கள் சரியாக பயன்படுத்த தவறினால் அடுத்த நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் போது நாம் எமது நிலம், அடையாளம் ஆகியவற்றை எல்லாம் இழந்து அரசியல் அனாதைகள் போல் ஆகும் நிலையில் இருப்போம். இதனை நான் மிகைப்படுத்தி கூறவில்லை. உண்மை நிலை இது தான்.

அம்பாறையையும், திருகோணமலையையும் ஏறத்தாழ முழுமையாக கபளீகரம் செய்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதம், இன்று மட்டக்களப்பை முழுவதுமாக விழுங்குவதற்கு திட்டங்களை வகுத்துள்ளது. தொல்பொருள் அடையாளம் இட்ட இடங்களாக 164 இடங்கள் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று அவை 600 இடங்



களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேபோல, திருகோணமலையில் எஞ்சியுள்ள தமிழர் நிலப்பரப்புக்களையும் கபளீகரம் செய்யும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, புல்மோட்டையில் தென்னைமரவடி மற்றும் குச்சவெளியில் ஏறாமடு ஆகிய இடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்படுகின்றன. இவ்வாறு மேலும் பல இடங்களில் சிங்கள குடியேற்றங்கள் அண்மைக் காலப்பகுதியில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1827 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த திருகோணமலையிலும் 18,000 (81சதவீதம்) தமிழ் மக்கள் வாழ்ந்தபோது 250 க்கும் குறைவான சிங்கள மக்களே வாழ்ந்ததாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இன்று ஏறத்தாழ சிங்களவர்களின் எண்ணிக்கையும் தமிழ் மக்களின் எண்ணிக்கையும் ஒரே அளவு. முஸ்லிம்களின் எண்ணிக்கை எம்மை விட அதிகம். இன்னும் ஓரிரு வருடங்களில் நாம் சிறுபான்மையினர் ஆவோம்.

காலம்காலமாக நாம் பிதிர்கடன்களை நிறைவேற்றிவந்த கன்னியா வெந்நீரூற்றை சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று ஆக்கிரமித்துள்ளது. எமது புகழ்பெற்ற கோணஸ்வரர் ஆலயம் முன்னர் கோகன்ன விகாரையாக இருந்ததாக புதிய ஒரு கதையை தற்போது அவிழ்த்து விட்டுள்ளனர். இது கோணேஸ்வரர் ஆலயத்தில் கைவைக்கும் அவர்களின் எண்ணத்தைக் காட்டுகின்றது.

இன்று எமக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமைக்கு காரணம் கடந்த 10 வருடங்களில் சரியான ஒரு அரசியல் தலைமைத்துவம் எமக்கு இல்லாமல் போனமையே ஆகும். 1977 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் சென்ற மறுவருடம் திருகோணமலையின் மூன்றில் இரண்டு நிலப்பரப்பை சேருநுவர என்ற புதிய பிரதேச சபையாக உருவாக்கி பிரித்தெடுத்தார்கள். சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி அலுவலகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த போது கன்னியா வெந்நீரூற்று ஆக்கிரமிக்கப்பட்டு புல்மோட்டையில் சிங்கள குடியேற்றம் நிறுவப்பட்டது. பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது. திருகோணமலையை பாதுகாப்பதற்கு சம்பந்தன் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதே உண்மையானது. 5 வருடங்களுக்கு முன்னர் பார்த்த பின்னர் தற்பொழுதுதான் சம்பந்தன் ஐயாவைத் தாம் காணுவதாக நான் கடந்த வாரம் அங்கு சென்றபோது பொதுமக்கள் என்னிடம் கூறினர். திருகோணமலை மாவட்டத்தில் தங்கி இருந்து அந்த மக்களின் குறைகளை அறிந்து எங்கெல்லாம் அநீதி இடம்பெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று அவற்றை தீர்க்கும் விருப்பமும் ஆற்றலும் உள்ள ஒருவரே திருகோணமலைக்கு இப்பொழுது தேவை.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் ஶ்ரீபன் என்று அழைக்கப்படும் ஆத்மலிங்கம் ரவீந்திராவே அதற்கு தகுதியானவர். அரசியலில் தனது முகவரியை தொலைத்து நின்ற சம்பந்தனுக்கு மீண்டும் முகவரியை பெற்றுக்கொடுத்ததுகூட ஶ்ரீபனே. தம்பி பிரபாகரனினால் சிறந்த ஆளுமையும் நிர்வாக திறனும் கொண்டவர் என்று அடையாளம் காணப்பட்டவர் ஶ்ரீபன். பல பொறுப்புக்களை நிழல் அரசாங்கத்தில் வகித்து அரசியல், பொருளாதார ரீதியாக அளப்பெரும் சேவைகளை அவர் செய்துள்ளார்.

திருகோணமலை மக்களே! ஶ்ரீபன் உங்களுக்காக உயிரையும் துச்சமாக மதித்து போராடியவர். உங்களுக்காக உங்களோடு வாழ்ந்தவர். அவர் உங்களுக்கு புதியவரல்லர். அறிவாற்றல், நிர்வாகத்திறன், தேசப்பற்று, எளிமை, துடிப்பு போன்ற நற்பண்புகளும் பலதிறமைகளும் ஒருங்கே அமைந்தவர். ஶ்ரீபன் திருகோணமலையை பாதுகாப்பார். அவரை நீங்கள் நம்புங்கள். அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். நீங்கள் ஏமாறமாட்டீர்கள். ஶ்ரீபனை மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யுங்கள். ’இனியொரு விதி செய்வோம். அதை எந்நாளும் காப்போம்’ என்ற பாரதியின் வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்க முன் வாருங்கள்.

இறுதியாக சம்பந்தன் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். தயவு செய்து கடந்த காலத்தில் நீங்கள் விட்ட தவறுகளை உணர்ந்து உங்களுக்கு மீண்டும் அரசியல் முகவரியை பெற்றுக் கொடுத்த உங்கள் தம்பி ஶ்ரீபனுக்கு வழிவிடுங்கள். உங்களால் செய்யமுடியாதவற்றை உங்கள் தம்பி செய்வார். தமிழ் மக்களின் தலைநகரமும் எங்கள் பூர்வீக பூமியுமான திருகோணமலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களாயின் போட்டியில் இருந்து ஒதுங்கி ஶ்ரீபனுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள். உங்களுக்கு நன்றாக தெரியும் உங்களைவிடவும் திருகோணமலையை பாதுகாப்பதற்கு ஶ்ரீபன் தான் பொருத்தமானவர் என்பது. ஶ்ரீபன் ஒரு வீரத் தமிழன். தன் மானத் தமிழன். ஆகையினால், ஶ்ரீபனுக்கு நீங்கள் விட்டுக் கொடுப்பதன் மூலம் நீங்கள் தோற்க மாட்டீர்கள். மாறாக நீங்கள் வெல்வீர்கள். திருகோணமலை மக்கள் வெல்வார்கள். ஆகவே, நீங்கள் அவ்வாறு செய்தால், வரலாறு உங்களைப் புகழும். திருகோண மலை மக்கள் உங்களைப் போற்றுவார்கள். திருக்கோணேஸ்வர பெருமான் உங்களை ஆசீர்வதிப்பார்.

நான் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் நீங்கள் தான் என்பதை நான் மறக்கவில்லை. உங்கள் மீது என்றும் எனக்கு மரியாதை உண்டு. ஆனால், இந்த நாட்டில் தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் உரிமைகளையும் முதன்மைப்படுத்தி உங்களை எதிர்த்து அரசியல் செய்யும் ஒரு நிலைமையினை காலம் எனக்கு வகுத்திருக்கிறது. என் கடமைகளில் இருந்து சரியமாட்டேன். - என்று உள்ளது.

“ஶ்ரீபன் ஒரு வீரத் தமிழன். தன்மானத் தமிழன். ஆகையினால், ஶ்ரீபனுக்கு நீங்கள் விட்டுக்கொடுப் பதன் மூலம் நீங்கள் தோற்க மாட்டீர்கள். மாறாக நீங்கள் வெல்வீர்கள். திருகோணமலை மக்கள் வெல்வார்கள். ஆகவே, நீங்கள் அவ்வாறு செய்தால், வரலாறு உங்களை புகழும். திருகோணமலை மக்கள் உங்களை போற்றுவார்கள். திருக்கோணேஸ்வர பெருமான் உங்களை ஆசீர்வதிப்பார்.”

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தனிமைப்படுத்தப்பட்ட கர்ப்பிணிக்கு தனியான விசேட அறையில் பிரசவம்

## யாழ் ஆஸ்பத்திரியில் முன்மாதிரி நடவடிக்கை

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் , ஓக 01

விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த கர்ப்பவதி ஒருவருக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் தனிமையான பிரசவ விடுதி வசதி ஏற்படுத்தப்பட்டு அதி தீவிர சுகாதார முன்னெச்சரிக்கையுடன் கூடிய பிரசவம் இடம்பெற்றது.

சவுதி அரேபியாவில் இருந்து கடந்த 7 ஆம் திகதி நாடு திரும்பிய கணவனும் மனைவியும் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த சமயம் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த 13 பேருக்கு கொரோனா இதுவரை உறுதி செய்யப்பட்ட காரணத்தினால் எஞ்சியவர்களும் வீடு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக குறித்த கர்ப்பவதியும் அங்கேயே தங்கியிருந்த நிலையில் பிரசவ திகதியை எட்டியிருந்தார்.

இவ்வாறு பிரசவ காலம் என்பதால் சாதாரணமாக விடுதியில் அனுமதிக்க முடியாத சூழலில் ஓர் தனிமைப் படுத்தல் வசதி ஏற்படுத்தப்பட்டபோதும் பிரசவ அறை அனைத்து தாய்மாருக்கும் பயன்படுத்தப்படுவதனால் அந்த அறையை உபயோகிக்காது மகப்பேற்று நிபுணர் சுரேஸ்குமாரின் வழிகாட்டலில் தனியானஓர் இடம்உடனடியாகஏற்பாடுசெய்யப்பட்டது.

தனியாக ஏற்பாடு செய்யப்பட்ட மகப்பேற்று அறையில் உச்ச பட்ச சுகாதார ஏற்பாடுகளுடன் திருகோணமலை கிண்ணியாவைச் சேர்ந்த தாய்க்கு நேற்றுக் காலை சுகப் பிரசவம் இடம்பெற்றதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புக்கள் உறுதி செய்தன.

# வெவ்வேறு கட்சிகளில் இருந்து ஜனாதிபதி, பிரதமர் வரக் கூடாது

## ஏன் என்று விளக்குகின்றார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஓக.01

ஈஸ்டர் படுகொலை குறித்து தேசிய புலனாய்வுத் துறையின் முன்னாள் தலைவர், நிலந்த ஜெயவர்தன வழங்கிய சாட்சியங்கள் இரண்டு வெவ்வேறு கட்சிகளிலிருந்து ஜனாதிபதியையும் பிரதமரையும் ஏன் தேர்ந்தெடுக்கக்கூடாது என்பதைக் காட்டியதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2015 ஜனவரியில் நல்லாட்சி அரசாங்கத்தின் தொடக்கத்தில் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான முறுகல் நிலை தேசிய புலனாய்வுத் துறையினை மிகவும் கடினமான சூழ்நிலையில் வைத்தது என்பதை காட்டியுள்ளதாக அவர் கூறினார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிலந்த ஜெயவர்தன வழங்கிய சாட்சியம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதில் அரசியல் தலைமை தோல்வியுற்றது என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்த அவர், அலட்சியம் மூலம் பயங்கரவாத திட்டத்தை முன்னோக்கி செல்ல அனுமதித்தவர்கள் தாக்குதலை தடுக்காதமையினை ஜனாதிபதி – பிரதமர் முரண்பாட்டில் குற்றம் சாட்ட முடியாது என குறிப்பிட்டார்.

மேலும் கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் சர்வாதிகாரம் குறித்து பலமுறை எச்சரித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் கீழ் பிரதமராகப் பணியாற்றத் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

இருப்பினும் நிலந்த ஜெயவர்தனவின் கூற்றின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தயார் நிலை குறித்து ஆராயப்பட வேண்டும் என்றும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா ஆபத்துக்கள் இன்னும் குறையவில்லை

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா ஆபத்துக்கள் குறையவில்லை என சுகாதார பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொலநறுவை, லங்காபுர பிரதேசத்தில் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டதனை தொடர்ந்து 300 பேர் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் ஹிங்குரக்கொட மற்றும் தமன்கடு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 58 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர்களை அடையாளம் காணுவதற்கான பி.சி.ஆர். பரிசோதனைக்காக இதுவரையில் 130 கோடி ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளதாக சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டில் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து இதுவரை யில் குறையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நாடு முழுவதும் பரவலாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட 413 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தூற்றப்படுகின்றார் மைத்திரி சுதந்திரக் கட்சியினர் கவலை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவைத் தூற்றும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் நடந்து கொள்கின்றனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த வாரத்தில் கடிதம் ஒன்றை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு அனுப் பவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பந்துல வெல்லல இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட முதன்மை வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிடுகின்ற போதிலும் அவருக்குச் சேறு பூசும் வகையில் கொழும்பு, கம்பஹா, பொலனறுவை போன்ற பகுதிகளில் பொதுஜன முன்னணியினர் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

இது இரண்டு கட்சிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள தேர்தல் உடன்பாட்டுக்கு எதிரான செயலாகும் என்று பந்துல வெல்லல சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுஜன முன்னணியின் இந்தச் செயற்பாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாட்டின் அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுக்கும் முனைப்பாகவே கருதப்படுகின்றது என்றும் பந்துல வெல்லல சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

# அரசியல் கட்சியின் பிரசார வாகனத்தில் றிப்பீட்டர் துப்பாக்கி

*றிப்பிட்டர் ரகத் துப்பாக்கியை மறைத்து வைத்திருந்ததாக கைதான சந்தேக நபரை 3 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*

*அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் ஒன்றில் பிரசார நடவடிக்கை ஒன்றிற் காக வந்திருந்த தேசிய காங்கிரஸ் அணியின் வாகனம் ஒன் றில் நேற்று மாலை பாய் ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் றிப்பிட்டர் ரக துப்பாக்கி ஒன்று 6 தோட்டாக்களுடன் மீட்கப்பட்டிருந்தது.*

*இந்தத் துப்பாக்கியை அந்த பிரசாரக் கூட்டத்திற்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸார் மீட்டமையுடன் துப்பாக் கியை எடுத்து வந்து அந்த வாகனத்தில் மறைத்து வைத்த சந்தேகத்தின் பேரில் 37 வயதான இறக்காமம் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்திருந்தனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை நாளை 2 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலி ஸார் குறிப்பிட்டனர்.*



# மொட்டுக் கட்சி ஆதரவாளர்கள் மீது மட்டக்களப்பில் நேற்றுத் தாக்குதல்!



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களுவன்கேணியில் உள்ள பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார அலுவலகம் மீது நேற்று இரவு இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதன்போது அலுவலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பதாகைகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. துண்டுப்பிரசுரங்களும் பதாகைகளும் எரியூட்டப்பட்டுள்ளன எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடாத்தினர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று களுவன்கேணியில் பொதுஜன பெரமுனவின் இரு ஆதரவாளர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்களினால் நேற்று இரவு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர் எனவும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று இரவு மரண வீட்டுக்கு சென்றிருந்த பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் இருவர் மீது மரண வீட்டுக்கு முன்பாக வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர்கள் இருவரும் ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் அவர்களை பொதுஜன பெரமுனவின் தலைமை வேட்பாளரும் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன் சென்று பார்வையிட்டார்.

ஒரு சுமுகமான நிலையில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான அட்டகாசங்களை நடாத்தியாவது வெற்றிபெறலாம் என இவர்கள் கருதுகின்றனர் என பொதுஜன பெரமுனவின் தலைமை வேட்பாளரும் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

# அமீரகத்திலிருந்து 335 பேர் திரும்பல்!

## கட்டாரிலிருந்து 14 பேர் வருகை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 335 பேரை ஏற்றிய விமானம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இன்று அதிகாலை எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான சிலு 648 எனும் விமானத்தில் அவர்கள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, கட்டாரிலிருந்து இலங்கையர்கள் 14 பேர் இன்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

கட்டார் விமான சேவையின் EK 668 எனும் விமானத்தில் அவர்கள் வருகை தந்துள்ளனர்.

இரு நாடுகளிலிருந்தும் வந்த இலங்கையர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், அதன்பின்னர் அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்ப டுத்தப்படுவார்கள் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 450 மாணவர்களும் 82 ஆசிரியர்களும் 7 ஊழியர்களும் சுய தனிமைப்படுத்தலில்

பொலநறுவை, கிரிதலேகம மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் 450 மாணவர்களும் 82 ஆசிரியர்களும், 7 ஊழியர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

லங்காபுர பிரதேச செயலகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. குறித்த நோயாளியுடன் நெருங்கி செயற்பட்ட ஆசிரி யர் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் இதுவரையில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் கடந்த நாள்களில் பாடசாலைகளில் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் இனத்தின் படுகொலையாளிகளான டக்ளஸ், சந்திரகுமாரைத் தோற்கடியுங்கள்!

## பரப்புரைக் கூட்டத்தில் சிறிதரன் வேண்டுகோள்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.01

யாழ்ப்பாணத்தில் மண்டைதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளிலே 60 அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்து செம்பாட்டுத் தோட்டக் கிணறுகளிலும் , தோம்பியார் தேவாலயக் கிணற்றிலும் புதைத்தபோது அரசுடனும் இராணுவத்துடனும் இருந்த டக்ளஸ் தேவானந்தாவும் சந்திரகுமாரும் இன்று இந்த மக்கள் முன்பாக வந்து வாக்குக் கேட்கின்றார்கள். தமிழ் இனத்தின் படுகொலையாளிகளான இவர்களை மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இந்த மண்ணிலே இடம்பெற்ற போரில் 4 லட்சம் வரையான பொது மக்களும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களும் உயிரைத் தியாகம் செய்தனர். இவ்வாறு இந்த மண்ணுக்காக உயிர்த்தியாகம் இடம்பெற்ற வேளை பலியெடுத்தவர்களோடு கைகோர்த்து நின்றவர்கள் ஏதோ கதைகளைக் கூறிக்கொண்டு வாக்குக் கேட்கின்றனர்.

இந்தப் பாரதிபுரம் மண்ணிலே 12 மாணவர்கள் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் உட்பட இறுதிப்போரில் மட்டும் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் பேர் உயிரிழந்தமை தொடர்பில் புள்ளிவிவரங்களோடு மன்னார் ஆயர் இராயப்பு யோசப் சாட்சியம் அளித்திருந்தார்.

இவ்வாறெல்லாம் நாம் கொல்லப்படும்போதும், அழிக்கப்படும்போதும் அரசுடனும் இராணுவத்துடனும் ஒன்றாக இருந்த சந்திரகுமார், டக்ளஸ் போன்றவர்கள் இன்று இந்த மக்களிடம் வாக்குக் கேட்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலே வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி , மண்டைதீவு ஆகிய இடங்களில் 60 பேரைக் கொன்றழித்து செம்பாட்டுத்தோட்ட கிணறுகளிலும், தோம்பியார் தேவாலயக் கிணற்றிலும் இவர்களே தாட்டனர். அதனைக் கிளறுமாறு நான் நாடாளுமன்றிலும், சாட்சியத்திலும் தெரிவித்தேன். இருப்பினும் எவையும் இடம்பெறவில்லை.

இன்று நாடே ஓர் இராணுவ ஆட்சியை நோக்கி நகர்கின்றது. வீதிகள் தோறும் காவலரண்கள் அதிகரிக்கின்றன. 17 அமைச்சுக்களில் இன்று இராணுவத்தில் தளபதிகளாக இருந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்தபடியாக கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இராணுவத்தினர் என இராணுவ அடித்தளம் இடப்படுகின்றது. இதனை டக்ளஸோ, சந்திரகுமாரோ அல்லது அங்கஜனோ தட்டிக் கேட்கமாட்டார்கள். நாம்தான் இவற்றைத் தட்டிக் கேட்க முடியும் – என்றார்.


பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2020
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பிரசார பொதுக் கூட்டம்



இடம்:- சங்கிலியன் பூங்கா, முத்திரைச் சந்தி, நல்லூர்
காலம்:- 02.08.2020 பி.ப 6.30 மணி
தலைமை:- கௌரவ.சி.வி.கே.சிவஞானம் அவர்கள் (அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
பேச்சாளர்கள்:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட அனைத்து வேட்பாளர்களும் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
“எங்கள் தமிழர் தேசமக்கள்
விடிவுக்காக விடுதலைக்காக
அர்ப்பணித்தவர்
உண்மை,
நேர்மை,
தியாகம்”
X8
மாவை.சோ.சேனாதிராசா
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

# எம்.பிக்கள் அனைவரும் சபையில் முகக்கவசம் அணிவது கட்டாயம்!

## - நாடாளுமன்ற அமர்வு தொடர்பில் சுகாதார வழிகாட்டல் வெளியீடு
## - கைலாகு கொடுத்தல், கட்டிப்பிடித்தலும் கூடாது

கொழும்பு, ஓக.01

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் எப்பொழுதும் முகக்கவசத்தை அணிந்திருப்பது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குக் கையளிக்கப்பட்ட, நாடாளுமன்றத்துக்காக தயாரிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்திலிருக்கும் நேரத்தில் முகக்கவசத்தைக் கழற்றவோ அல்லது கீழிறக்கவோ கூடாது என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆசனங்களில் அமர்ந்திருக்க முடியுமாக இருக்கின்றபோதும், அவர்கள் அனைவரும் சபா மண்டபத்திலிருக்கும்போது தமக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் மாத்திரம் அமரவேண்டும் என்பதுடன், சபா மண்டபத்திலிருக்கும் சகல நேரத்திலும் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுவதற்கும் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சபா மண்டபத்திலிருக்கும் சகல அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற பணியாளர்களும், கலரியிலிருக்கும் சகல தரப்பினரும் முகக்கவசத்தை அணிந்திருக்க வேண்டும் என்றும் இந்த வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்காகத் தயாரிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்கவினால், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கையடக்கத்தொலைபேசி மற்றும் பேனை போன்ற தனிப்பட்ட கருவிகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாதிருப்பதுடன், கைலாகு கொடுத்தல், கட்டிப்பிடித்தல் போன்ற வாழ்த்தும் முறைகளைப் பின்பற்றாதிருத்தல் போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன எனவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க, சுகாதாரப் பாதுகாப்பான முறையில் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்த வழிகாட்டல் தொகுப்புத் தயாரிக்கப்பட்டிருக்கின்றது எனச் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற சபா மண்டபத்துக்குள் நுழையும் சகல வாயில்களிலும் கிருமி நாசினி திரவம் வைக்கப்படுவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் சபா மண்டபத்துக்குள் நுழைய முன்னர் தமது கைகளைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி தமது ஆசனங்களில் அமரமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, நாடாளுமன்றத்தை கொரோனாத் தொற்று சவாலிலிருந்து பாதுகாப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன எனவும், இது சுகாதார அமைச்சால் தயாரிக்கப்பட்ட மூன்றாவது வழிகாட்டல் தொகுப்பு எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற சபா மண்டபம், உறுப்பினர்களின் முகப்புக் கூடம், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் விசேட விருந்தினர்களுக்கான கலரிகள், உறுப்பினர்களின் உணவுக் கூடம், நூலகம் என்பவற்றை உள்ளடக்கும் வகையிலும், போக்குவரத்துப் பிரிவு மற்றும் பராமரிப்புப் பிரிவினர் செயற்படவேண்டிய முறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய வகையிலும் இந்தச் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்காகத் தயாரிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் தொகுப்பை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கும் நிகழ்வில், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட நாடாளுமன்றத் திணைக்களப் பிரதானிகளும் கலந்துகொண்டனர்.

# ஜனநாயக உரிமையை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## மட்டு. அரச அதிபர் வேண்டுகோள்

கொழும்பு, ஓக.01

பொதுமக்கள் தமது ஜனநாயக உரிமையைச் சரியாகப் பயன்படுத்தவேண்டுமென மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமாகிய கலாமதி பத்மராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம் மாவட்டத்தில் உள்ள கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய 03 தேர்தல் தொகுதிகளிலும் 4 இலட்சத்து 9 ஆயிரத்தி 808 வாக்காளர்கள் 05 நாடாளுமன்ற பிரதிநிகளைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கவுள்ளனர்.

இதற்காக 16 அரசியல் கட்சிகளையும், 22 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 304 அபேட் சகர்கள் போட்டியிடுகின்றனர். இத்தேர்தலில் 12 ஆயிரத்து 815 அஞ்சல் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில் 97 சதவீதமான அஞ்சல் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வழமைக்கு மாறாக இம்முறை கொவிட் 19 கொரோனா தொற்று அச்சம் காரணமாக சுகாதார விதிமுறைகளைப் பேணி இத்தேர்தலை நடத்த சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. மேலும் இத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் 194 வாக்கெடுப்பு நிலையங்களும், கல்குடா தொகுதியில் 119 வாக்கெடுப்பு நிலையங்களும், பட்டிருப்புத் தொகுதியில் 115 வாக்கெடுப்பு நிலையங்களுமாக மொத்தம் 428 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்புக் கடமைகளுக்காக இம்முறை 4 ஆயிரத்தி 710 அரச உத்தியோகத்தர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வாக்கெண்ணும் பணிகளுக்காக பிரதான வாக்கெண்ணும் நிலையங்களாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரியும், மகாஜனக் கல்லூரியும் செயற்படவுள்ளன. இதில் 34 வாக்கெண்ணும் மண்டபங்கள் இந்துக்கல்லூரியிலும், 33 வாக்கெண்ணும் மண்டபங்கள் மகாஜனக்கல்லூரியிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 1,417 அரச உத்தி யோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்படவுள்ளனர்.

இதுதவிர இத்தேர்தல் கடமைகளுக்காக 307 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றில் இம்மாவட்டத்தைச்சேர்ந்த அரச திணைக்கள வாகனங்கள் - 159. பிற மாவட்ட அரச வாகனங்கள்- 54. ஏனையவை வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனி யாருடையவை.

தேர்தல் விதிமுறைகள், வன்செயல்கள் தொடர் பான முறைப்பாடுகள் இன்றுவரை 222 பதிவு செய்யப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகள் தொடர் பாக, முறைப்பட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாக நிய மிக்கப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு பொலிஸாரின் உதவியுடன் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்தில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. மக்கள் அச்சமின்ற தமது வாக்குகளை நேரகாலத்துடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று அளிக்க வேண்டும்.

வாக்காளர்கள் தமது சுகாதார நலகன் கருதி வாக்களிக்கச் செல்லும்போது போனாக்களைக் கொண்டுசெல்வது நல்லது. கட்டயாம் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். வாக்குச் சாவடிக்குள் நுழையம் போதும், வாக்களித்து விட்டு வெளியேறும் போதும் தொற்று நீக்கித்திரவம் கொண்டு வாக்காளர் தமது கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது தவிர வாக்கெண்ணும் பணிகள் தேர்தல் தினத்திற்கு மறுதினமே நடைபெறும். வாக்குப் பெட் டிகள் வாக்கெண்ணும் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, வாக்கெண்ணும் மண்டபம் சீல் செய் யப்படுவதுடன் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு அரசியல் கட்சியினதும், சுயேச்சைக் குழுவினரினதும் பிரதிநிதிகள் மூவர் வீதம் வாக்கெண்ணும் நிலைய வாளாகத்தினுள் தரித்திருக்க அனுமதிக்கப்படுவர் – எனவும் அவர் தெரிவித்தார்.

# பீடி இலைகள் மீட்கப்பட்டன

கொழும்பு, ஓக.01

கற்பிட்டி, பள்ளிவாசல்துறை கடற்கரையோரத்தில் மிகவும் சூட்சுமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான 961 கிலோ கிராம் பீடி இலைகளை கற்பிட்டி பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் குழு ஒன்று அந்தப் பிரதேசத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன்.

இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகு மூலம் இந்த பீடி இலைகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன், பீடி இலைகளை மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்காக பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நல்லூரில் இன்று...



படங்கள்:- பிரபாகரன் டிலக்ஷன்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2020 இல் வெளியிடப்பெற்றது.